Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 6 ஜுன் 2012

தனிப் பிரதி ரூ. 9/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

- ❋ திருமறை ஆசான் இதழை தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு இதழ் நிறுத்தப்படும்.
- ❋ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.
- ❋ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........................................ 1
2. ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை இருக்கிறது? ........................ 9
3. பெண்கள் பகுதி ........................................ 14
4. வாலிபர் பகுதி ........................................ 18
5. சிறுவர் பகுதி ........................................ 21
6. நிழலும், நிஜமும் ........................................ 23
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........................ 27
8. நம் ராஜா வருகிறார் ........................ 31


- ✚ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- ✚ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- ✚ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- ✚ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- ✚ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 JUNE 2012 Issue - 6


ஆசிரியர் உரை

## தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டார்கள்

ஒருவர் ஒன்றை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள்ள மறுப்பதும் அவரவர்களின் தனிப்பட்ட உரிமை. இந்த உரிமையானது, மனிதன் உண்டாக்கப்பட்ட போதே பரலோகத்தின் தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. மனிதனைப் படைத்த அன்பான தேவன், அவன் ஓர் அடிமையைப் போல் இராமல், தானாகவே சிந்தித்துச் செயல்படும் உரிமை பெற்றவனாக இருக்கும் படியாகவே படைத்தார். ஆனால், பொதுவாகவே சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளும் இழிகுணம் கொண்ட மனித இனம், தேவன் தந்த இந்த உரிமையைப் பெரும்பாலும் ஞானமாகவும், நியாயமாகவும், நீதியாகவும் பயன்படுத்துவதில்லை. இத்தீஞ்செயலுக்கு ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்திலேயே அச்சாரம் போட்டுவிட்டனர். ஆம், தேவன் இட்ட, "புசிக்கலாம்", "புசிக்க வேண்டாம்" என்ற கட்டளையில், தெரிந்தெடுக்கும் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தி தீமைக்குத் தாயம் போட்டனர். இத்தீமையின் தொடர்ச்சியைத்தான் நாம் இன்றளவும் பார்த்துக் கொண்டும், அனுபவித்துக் கொண்டும் உள்ளோம். பக்தி உலகமும் இதற்கு விதிவிலக்காக இல்லையென்பது மிகுந்த வேதனைக்குரிய ஒன்று.

ஆயினும், மெய்பக்தியும், இறை உணர்வும் உள்ளவர்கள் எந்நாளும் சோர்ந்து போகத் தேவையில்லையென்பதற்கான முன் உதாரணங்களும், முன் மாதிரிகளும் தேவன் தந்த வேதாகமத்தில் இல்லாமலுமில்லை. தேவ பக்தியுள்ளவர்களுக்கு இது ஓர் ஆறுதலான செய்தி.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தெசலோனிக்கே பட்டணத்து சபையார் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளனர். அவர்கள் பற்றி ஆவியானவர் பவுலைக் கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். "ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனிதர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்து கிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது ". (I தெச. 2:13) பவுலும், பவுலடியாருடைய கூட்டாளிகளும் அவர்கள் மத்தியில் நற்செய்தியைப் பிரசங்கித்த போது, அதை எந்த வகையாகப் பார்த்து ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி வந்தது. அவர்கள் வாயின் வார்த்தைகளை மனிதர் வார்த்தைகளாகப் பார்த்து நிராகரிப்பதா அல்லது தேவ வார்த்தைகளாகப் பார்த்து ஏற்றுக் கொள்வதா என்று. தெசலோனிக்கேயர் நீதியான முடிவை எடுத்து, விசுவாச வாழ்க்கையில் மிகுந்த பலனைத் தந்தனர்.

இப்படி அவர்கள் தேவவசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டு, தங்கள் பக்தி வாழ்க்கையில் பலன் தந்ததற்கான காரணங்கள் என்னவென்று அறிந்து கொள்வற்கு முன், நமது வழக்கத்தின் படியாக, தெசலோனிக்கேயர் பற்றிய பின்னணியைக் குறித்து கொஞ்சம் பார்த்து விடுவோம்.

அப்போஸ்தலன் பவுல் மேற்கொண்ட மூன்று நற்செய்திப் பயணங்களில், இரண்டாவது பயணத்தின் போது ஆரம்பிக்கப் பட்டது தான் இந்த தெசலோனிக்கே பட்டணத்து சபை. பவுலடியார் ஒரு மூன்று வாரங்கள் அவர்கள் மத்தியில் தங்கியிருந்து வேத வாக்கியங்களின் நியாயங்களை ஆழமாக எடுத்துப் போதித்து, இயேசுவே கிறிஸ்து என்று உறுதிபடுத்திக் காண்பித்தான் (அப். 17:1 -3) இங்கே பவுலும், அவனோடிருந்தவர்களும் செய்த ஊழியத்திற் கான பலன் மிகுதியாய் இருந்தது. யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளானவர்களும், கனம் பொருந்திய அநேக ஸ்திரீகளும் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து சரியானதைத் தெரிந்து கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். ஆயினும், நீதியை எட்டியாக எண்ணின எத்தர்கள் கூட்டம், வீணர் களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு, கூட்டங்கூடி பெருங்கலக முண்டாக்கி, பவுலையும், சீலாவையும் வலுக்கட்டாயமாக வெளி யேற்றினர் (அப் 17 : 4-10)

கொஞ்ச காலமே தெசலோனிக்கேயரோடு தங்கியிருந்தாலும், அவர்களிடம் அடைந்த ஆவிக்குரிய அனுபவம் அலாதியானதாக இருந்தபடியால் அவர்களை எப்படியாவது மறுபடியும் சந்திக்க வேண்டுமென்று இரண்டு முறை முயற்சித்தார். ஆனால் இரண்டு முறையும் தடையுண்டாயிற்று (I தெச. 2:17,18). ஆயினும், புதிதாகப் பக்தி வாழ்க்கையைத் தொடங்கின அந்த இளம் சபையார்கள் தங்கள்

ஆவிக்குரிய வாழ்வில் எப்படியிருக்கிறார்களோ என்று அறியும் படியான ஆவல் பவுலடியாருக்கு அடங்கினபாடில்லை.

ஆகவே, விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த உத்தமக் குமாரர் களில் ஒருவனாகிய தீமோத்தேயுவை அனுப்பி, தெசலோனிக்கேயர் பற்றிய செய்திகளைத் தெரிந்து வரும்படியாக அனுப்பினார் (I தெச. *3:5*). அந்த இளம் சபையார் பக்தி வாழ்க்கையில் படுவேகமாக வளர்ந்து வருகிறார்கள் என்பதும், தங்களைப் பக்தி வாழ்க்கையில் நடத்தின பவுலடியார் மீது மிகுந்த மரியாதையும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதும் தான் தீமோத்தேயு கொண்டு வந்த இனிமையான செய்தி. அத்தோடு, கிறிஸ்துவின் வருகை போன்ற சில காரியங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதில் சிறு சிறு குறைபாடுகள் இருப்பதும் பவுலடியாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்படி நிறைந்த நிறைகளையும், கொஞ்சம் குறைபாடுகளையும் மனதில் உள்வாங்கிக் கொண்டு, ஆவியானவரின் துணையோடு எழுதப் பட்டது தான் முதலாம் நிருபம்.

சரி, இப்படிப்பட்ட நிருபத்தின் ஊடே வருவது தான் நம்முடைய இம்மாத தலைப்பிற்கு ஆதாரமாக இருக்கும் I தெச *2:13* ம் வசனம். இந்த வசனத்தின்படி தெசலோனிக்கேயர், தேவ வசனத்தை மனிதர் வார்த்தைகளாகப் பார்க்காமல், தேவனுடைய வார்த்தை களாகவே ஏற்றுக் கொண்டபடியால், வல்லமையுள்ள தேவ வசனம் அவர்களுக்குள்ளே பலமான கிரியை நடப்பித்திருக்கிறது. ஆயினும், அது மட்டும் தான் காரணம் என்று சொல்ல முடியாதபடி வேறு சில உண்மைகளும் உள்ளதென்பதை இதற்கு முந்தின வசனங்களிலிருந்து *(7-12)* தெரிந்து கொள்ள முடியும். ஆவியானவர் இப்படி வெளிப்படுத்தி யிருக்கும் இவ்வுண்மைகளை நாம் எளிதில் ஒதுக்கிவிட முடியாது. ஆகவே, தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் பவுலடியாரின் வார்த்தை களை வேத வசனமாகவே ஏற்றுக் கொண்டதற்கும், அவைகள் அவர் களுக்குள்ளே பெலன் செய்ததற்குமான உண்மைகள் எவைகளென்று தெரிந்து கொண்டு, நமக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

**ஒரு பாசமுள்ள தாயாகப் பவுலடியார் (I தெச 2:7-8)**

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்ததற் கான முதல் காரணமாக பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஒரு தாயாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

இங்கே பவுலடியாரின் வார்த்தைகளை கவனியுங்கள். " உங்களி டத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடி யினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்கமனதாயிருந் தோம்" (I தெச. *2:7,8*). ஆவிக்குரிய ரீதியில் அவர்களைப் பெற்றெடுத்த

அந்த ஆரம்ப நாட்களில், பவுல் ஒரு தாயாக, அதுவும் பால் கொடுக்கிற ஒரு தாயாக நடந்து கொண்டேன் என்கிறார். ஒரு தாய்க்கு இணை தாய்தான். தாய்க்கு இணையாக இப்பூமியில் நாம் யாரையாவது குறிப்பிட முடியுமா? முடியவே முடியாது. அப்படியானால், அவர்களை எப்படி பாசத்தோடு அக்கறையோடு, கரிசனையோடு கவனித்திருப்பார் என்று எண்ணிப் பாருங்கள். நிச்சயமாகவே அவர் ஆவிக்குரிய ரீதியில் ஓர் ஒப்புமை அற்ற தாயாகவே இருந்திருப்பார்.

அதுமாத்திரமல்ல, தெசலோனிக்கேயரின் ஆவிக்குரிய மேம்பாட்டுக்காக, ஜீவனையும் கொடுக்கத் தயாராயிருந்தோம் என்கிறார். பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கும் தாய்மார்களே கூட பெற்ற பிள்ளைகளுக்காக உயிரைக் கொடுக்க மறுக்கும் போது, யோசிக்கும் போது, கொடுக்கிறேன் என்று பாசாங்கு செய்யும் போது, சத்தியத்தைச் சொன்னது தவிர, வேறு எந்த ஒரு ஒட்டும், உறவும் இல்லாத பவுல் அவர்களுக்காக உயிரைக் கொடுக்க மனதாயிருந்தோம் என்று சொல்வது என்ன சாதாரணமான ஒன்றா? பவுல் ஒப்புக்காகச் சொல்லி இருக்க வாய்ப்பில்லை. அப்படியிருந்திருந்தால் ஆவியானவர் இதை வெளிப்படுத்தியிருந்திருக்கமாட்டார். அப்படித்தானே! தெசலோனிக்கேயர் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய ரீதியில் அரவணைப்போடு வளர்ந்து, விசுவாசத்தில் பலன் கொடுத்ததற்கான காரணங்களில் ஒன்று இப்பொழுது நமக்கு விளங்குகிறது.

அப்படியானால் அன்பானவர்களே, நாம் வாழும் இக்கால கட்டத்தில், ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுக்கப்படும் ஆத்துமாக்கள் இப்படிப்பட்ட கரிசனையையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும் பெறுகிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். உலகெங்கிலும் அறுவடை செய்யப்படும் ஏராளமான ஆத்துமாக்கள், ஏற்றுக் கொண்ட சத்தியத்தில் நிலைத்திராமலும், விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுக்காமலும் போவதற்கான காரணம் இதுவாக இருக்கலாமோ? கர்த்தருடைய கனமான ஊழியத்தைச் செய்பவர்கள் இந்த உண்மையை வெகுவாகப் புரிந்து செயல்படுவது அவசியம்.

முற்பிதாக்களில் மூன்றாமவராகிய யாக்கோபுக்கு இந்த உண்மை வெகு காலத்துக்கு முன்பே தெரிந்திருக்கிறது. தன் சகோதரனாகிய ஏசாவை அவன் பல வருடங்களுக்குப் பிறகு சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பின் போது, ஏசா ஒரு பாசம் கொண்ட அண்ணனாக மிகவும் யதார்த்தமாக நடந்து கொண்டான். ஒரு கட்டத்தில் தன் தம்பியாகிய யாக்கோபுக்கு உதவும் பொருட்டு, நாம் புறப்பட்டுப் போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான் (ஆதி. 33:12). அப்பொழுது யாக்கோபு, **"பிள்ளைகள் இளம் பிள்ளைகள் என்றும், கறவையான ஆடு மாடுகள் என்னிடத்தில் இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும், அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம்"** என்றான் (ஆதி. 33:13). யாக்கோபு எதை அல்லது யாரை எப்படி நடத்த வேண்டுமென்ற கலையை அறிந்த

வனாக இருந்தான். ஊழியங்கள் தோற்றுப் போகாமல், ஆத்துமாக்கள் பின்மாற்றம் அடையாமல், சத்தியத்தில் வளர்ந்தோங்க வேண்டு மானால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் யாக்கோபுக்கும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் பவுலடியாருக்கும் தெரிந்திருந்த வழிநடத்தும் பாங்கு ஒவ்வொரு ஊழியருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

## II ஓர் உண்மை ஊழியனாகப் பவுலடியார் (1தெச. 2:9-10)

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்ததற்கான இரண்டாவது காரணமாக, பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஓர் உண்மை ஊழியனாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

அவர்களை ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த பவுலடியார், ஒரு பால் கொடுக்கிற தாயைப் போல் அவர்களை அணைத்துப் பாதுகாத்து வளர்த்ததோடு நில்லாமல், அவர்கள் கண்களுக்கு முன்பாக எல்லா வகையிலும் தன்னை ஒரு தேவ ஊழியனாக வெளிப்படுத்திக் காட்டினார். அவர் கூறுவதைப் பாருங்கள். " சகோதரரே, **நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்"** *(1 தெச. 2:9)* என்று.

அப்போஸ்தலனாகிய பவுலடியார் தெசலோனிக்கேயருக்கு மத்தியில் ஊழியம் செய்தபோது, தான் அவர்களோடிருப்பது எந்த வகையிலும் அவர்களுடைய விசுவாச வாழ்க்கைக்குப் பாதிப்பாகி விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்துள்ளார். இந்நோக்கத்திற்காக தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட உரிமையை யும், சிலாக்கியத்தையும் தூக்கி ஓரமாக வைத்துவிட்டார். எப்படி யெனில், " **அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்** " *(1 கொரி. 9:14)* என்றும், " **திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மை களிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்** " *(கலா. 6:6)* என்றும் சொல்லப் பட்டுள்ள தேவ வார்த்தைகள் தனக்குக் கொடுத்த அனுமதியை அவர் தனக்காக ஒரு நாழிகையாகிலும் பயன்படுத்தவில்லை. தங்கள் நிமித்தம் அவர்களுக்கு ஏதாவது ஓர் இடறல் ஏற்பட்டு, அதினிமித்தம் அவர்களுடைய ஆத்துமா கெட்டுப்போய் விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார். அதற்காக ஊழிய நேரம் போக இரவும், பகலும் உழைத்துள்ளார்.

நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது ஒரு தோரணையான வேலை என்று கருதப்படுகிறது. ஆனால், பவுலடியாருக்கோ அது சாட்சியான ஒரு வாழ்க்கையாக இருந்துள்ளது. நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது அழிந்து போகும் ஆத்துமாக்களைக்குறித்த அக்கறை

யற்றதாகவும், இருக்கின்ற ஆத்துமாக்களை எப்படியாவது கரை சேர்க்க வேண்டுமென்ற எண்ணமற்றதாகவும் இருக்கிறது. ஆனால், பவுலடியாருக்கோ எந்தவொரு ஆத்துமாவும் கெட்டுப் போய் விடக்கூடாது என்ற பாரம் கொண்டதாய் இருந்துள்ளது. நம்முடைய நாட்களில் ஊழியம் என்பது பெரும்பாலும் வயிற்றுக்கானதாய் இருக்கிறது. ஆனால், பவுலடியாருக்கோ அது தேவனுக்கானதாய் இருந்துள்ளது. நம்முடைய நாட்களில் பெரும்பாலான விசுவாசிகள் எவ்வித வளர்ச்சியுமில்லாமல் முளைத்த குழிக்குள்ளேயே இருப்பதற்கும், தெசலோனிக்கே சபையார் விசுவாசத்தில் வளர்ந்து கனி தந்தற்குமான காரணம் என்னவென்று இப்பொழுது புரிகிறதா?.

அதுமாத்திரமா, பவுலடியார் வேறென்ன சொல்லியிருக்கிறார் என்றும் கவனியுங்கள். **விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும், நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கும் நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி [1 தெச. 2:10] என்று.** இது எவ்வளவு பெரிய காரியமென்று கொஞ்சமாகிலும் விளங்குகிறதா? இன்றைக்கு தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறோம் என்பவர்களால், தங்களுடைய பரிசுத்தம் பற்றியும், நீதி பற்றியும், பிழையற்ற வாழ்க்கை பற்றியும் தேவனைச் சாட்சியாக வைத்து வாயைத் திறக்க முடியுமா? சொல்லுங்கள். அதிகபட்சம், என் மனைவியைக் கேட்டுப்பார் அல்லது என் பிள்ளைகளைக் கேட்டுப்பார் என்று வேண்டுமானால் சொல்ல முடியும். அதற்கு மேல் பேச முடியுமா? வேதாகமத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, மேடை ஏறி, ஊர் கேட்க உரக்கக் கத்துவது தான் ஊழியம் என்று சொல்லும்படியான நிலை மாறி, பவுலடியாரைப் போல் நெஞ்சை நிமிர்த்தி, இது தான் ஊழியம், இப்படித்தான் ஊழியம் என்ற உன்னத நிலை ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான், தெசலோனிக்கே சபையாரைப் போன்ற விசுவாசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## III ஒரு நல்ல தகப்பனாகப் பவுலடியார் (1 தெச. 2:11,12)

தெசலோனிக்கே பட்டணத்தார் தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசித்துப் பலன் கொடுத்ததற்கான இன்னுமொரு காரணமாக, பவுலடியார் அவர்களுக்கு மத்தியில் ஒரு நல்ல தகப்பனாக நடந்து கொண்டதைக் கூறலாம்.

தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு நடுவே ஒரு பாசத் தாயாக, ஓர் உண்மையுள்ள நேச ஊழியனாகப் பணியாற்றிய பவுலடியார், அவர்களுடைய ஆவிக்குரிய தேவையினிமித்தம் இங்கே தன்னை ஒரு நல்ல தகப்பனாக மாற்றிக் கொள்ளுகிறார். இது சம்பந்தமாக, ஆவியானவரின் வெளிப்பாட்டைப் பாருங்கள். **மேலும், தம்முடைய ராஜ்ஜியத்திற்கும், மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்** *(1 தெச. 2:11,12)*. திருமண உறவின் வாடை கூடப்படாத பவுலடியார், இப்படித்

தன்னை ஒரு தாய் என்றும், ஒரு தகப்பன் என்றும் பேசுவது உண்மையாகவே பிரமிப்பை ஏற்படுத்துகிறது. பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில், "....எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் " (1கொரி. 9:22) என்பதின் பொருளில் இதுவும் அடக்கமோ? இந்த தேவமனிதர், பிறருடைய ஆத்தும மேம்பாட்டுக் காகப்படுகிற பாட்டைப் பார்க்கும் போது வியப்பாய் உள்ளது.

பவுலடியார் தன்னை ஒரு தகப்பன் இடத்தில் வைத்துக் காரிய மாற்றியதற்கு ஆதாரமாக மூன்று தேர்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். 1. புத்தி 2. தேறுதல், 3. எச்சரிப்பு. இந்த மூன்று வார்த்தைகளின்படி ஒவ்வொருவனுக்கும் ஊழியம் செய்துள்ளார். தெசலோனிக்கே சபையில் எத்தனை அங்கத்தினர்கள் இருந்தார்களோ தெரியாது. ஆனால், ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனித்து வளர்த்துள்ளார். இரண்டு பிள்ளைகள், மூன்று பிள்ளைகள் என்று வைத்திருக்கக் கூடிய சரீரப்பிரகாரமான தகப்பன்மார்களால் கூட இப்படித் தனித்தனியாக கவனிக்க முடிவதில்லை. ஆனால், பவுலடியார், " உங்களில் ஒவ்வொருவனுக்கும் "என்று குறிப்பிடுகிறார். அவர் எப்படிப்பட்ட ஓர் ஆவிக்குரிய தகப்பனாக இருந்திருக்கிறார் பாருங்கள்! நம்முடைய நாட்களில் தங்களை ஆவிக்குரிய தகப்பன் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புபவர்கள் இப்படி இருக்கிறார்களா? விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுக்காமலிருப்பதற்கான காரணம் இன்னுமா புரியவில்லை! இக்காரியத்தில் சிந்தை மாற்றமும், செயல் மாற்றமும் தேவை, அதுவும் உடனடியாகத் தேவை.

இப்பொழுது அந்த மூன்று வார்த்தைகளில் கவனம் செலுத்துவோம். முதல் வார்த்தை "புத்தி". "புத்தி" என்பது அறிவு சம்பந்தப்பட்ட வார்த்தை. ஒருவன் செய்ய வேண்டிய ஒன்றைச் சரியாகச் செய்யாத போது " புத்தி " இருக்கிறதா என்று கேட்கிறோம். சரியாகச் செயல்படாத கன்னிகைகள் " புத்தியில்லாத கன்னிகைகள் " என்றுதான் வேதாகமத்தால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (மத். 25:11,12). இதன் மூலம், பவுலடியார், தெசலோனிக்கே சபையார் பக்தி ரீதியாகச் செய்கின்ற மற்றும் செய்ய வேண்டியவைகளை எப்பொழுதும் சரியாகச் செய்ய வேண்டுமென்று போதித்திருக்கிறார் என்று தெரிகிறது. பிரசங்கிப்பது தான் என் வேலை, ஞானஸ்நானம் கொடுப்பது தான் என் வேலை, திருவிருந்து கொடுப்பது தான் என் வேலை, அதற்கு மேல் நீ எப்படிப் போனால் எனக்கென்ன என்று அவர் இருக்கவில்லை. புத்தி சொல்வது ஒன்றும் பவுலுக்குப் புதிதல்ல. தன்னுடைய முதல் நற்செய்திப் பயணத்திலேயே, அந்தியோகியாவில், சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லியுள்ளார் (அப். 14:22).

இரண்டாவது வார்த்தை " தேறுதல் ". தேறுதல் ஆறுதல் இந்த இரண்டும் சமமான பொருள் தரும் வார்த்தைகள். புத்திமதிக்குப் போதுமான மரியாதை இல்லாதபோது, ஒரு நல்ல தகப்பன் தண்டிப்பார். எபிரெயர் ஆசிரியர், "....தகப்பன் சிட்சியாத


புத்திரனுண்டோ என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்" (எபி. 12:7). சிட்சை மகிழ்ச்சியைக் கொடுக்குமா அல்லது வருத்தத்தைக் கொடுக்குமா? இக்கேள்விக்கு ஆவியானவரின் பதிலைப் பாருங்கள். "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி. 12:11). ஆக, பவுலடியார் அவர்களைத் தண்டித்த போது, அவர்களுக்குத் துக்கம் வந்திருக்க வேண்டும். ஆனால், பவுலடியாரோ அவர்களின் துக்கத்தை வேடிக்கை பார்த்து ரசிக்காமல், அவர்களை ஆற்றித் தேற்றி வழி நடத்தியிருக்கிறார்! இவரல்லவா தேவ மனிதர் .

மூன்றாவது வார்த்தை "எச்சரிக்கை". "எச்சரிக்கை" என்பது ஒரு கடைசி கட்ட நடவடிக்கை. காரியங்கள் கைமீறிப் போகும் போது, ஆபத்தும், அழிவும் காத்திருக்கிறது, உன்னைக் காப்பாற்றிக்கொள் என்று விடுக்கப்படுவது தான் எச்சரிக்கை. தெசலோனிக்கேயரின் பக்தி வாழ்க்கைக்காகப் பெரும்பாடுபட்ட பவுல், இதையும் விட்டு வைக்கவில்லை. ஏன் இப்படிப் பவுல் கடுமையாக நடந்து கொண்டார் என்று நாம் எண்ணத் தேவையில்லை. ஏனெனில், இது பரலோக தேவனின் பாணி மற்றும் இயேசு ஆண்டவரின் பாணி. "யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்று தேவனின் பெயரில் எச்சரித்தான் (யோனா 3:4). "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக். 13:3,5) என்று இயேசு எச்சரித்துள்ளார். ஆக, ஆவியானவரின் துணை கொண்டு பவுலடியாரும் இதைத்தான் செய்துள்ளார்.

உண்மையும், நன்மையுமான இருதயமுள்ளவர்களிடத்தில் விடுக்கப்படும் எச்சரிப்புக்கு எப்பொழுதும் நல்ல பலன் கிடைக்கும். தெசலோனிக்கே பட்டணத்தார் எச்சரிப்பை சரியான விதத்தில் ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து பலன் தந்திருக்கிறார்கள். அப்படியானால், பவுலடியாரின் இந்த ஊழியப்பாணி நம்முடைய நாட்களில் பின்பற்றப்படுகிறதா? எச்சரிப்பு கொடுத்தால் ஓடி விடுவார்களே, அப்பொழுது கூட்டம் குறையுமே, காணிக்கை குறையுமே, ஒரு சிறப்புக் கூட்டம் போட்டால் வரமாட்டார்களே என்றெல்லாம் கணக்குப் போட்டு ஊழியம் செய்தால் ஊழியம் தேவனுக்குப் பிரியமானதாக இருக்காது. விசுவாசிகளுக்கு எந்தவொரு ஆவிக்குரிய நன்மையையும் ஏற்படுத்தாது.

ஆகையால், அருமையானவர்களே, தேவ வசனத்தை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தில் வளர்ந்து பலன் கொடுப்பதற்கு, தெசலோனிக்கே சபையாரின் மனநிலையை விசுவாசிகள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்வோம். விசுவாசிகள் அப்படி எல்லாவகையிலும் வளர்ந்து மிகுந்த பலனைக் கொடுப்பதற்கு பவுலடியாரின் ஊழியப் பாணியை கர்த்தருடைய ஊழியர்கள் எல்லோரும் பின்பற்றுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✿



# ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை இருக்கிறது?

**J.C. சோட்**

சிலருக்கு இரத்தம் பற்றிப் பேசுவது விரும்பத்தக்க ஒன்றாக இருக்காது. இது ஒரு வெட்டுக் காயத்தையோ, ஒரு புண்ணையோ, ஏன் ஒரு மரணத்தையே கூட அவர்களுக்கு நினைவுப்படுத்துவதாக இருக்க லாம். மத உலகிலுள்ள சிலர் இரத்தம் என்ற வார்த்தையை தங்கள் வழக்கு மொழியிலிருந்து நீக்கிப்போட முயற்சி செய்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் மனிதனுடைய பாவம் நிவிர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகள் அல்லது இரத்தப் பலிகள் தேவை என தேவன் சொன்னார். இரத்தத்தில் உயிர் இருந்தபடியாலும், அது உயிரை அடையாளப்படுத்தினபடியாலும், இரத்தம் முக்கியமான தாக இருந்தது. இந்த காரணத்திற்காகத்தான் இரத்தம் புசிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. "*மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக் காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமா விற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்*" என நாம் லேவியராகமம் 17:11,12 வசனங் களில் வாசிக்கிறோம்.

பழைய உடன்படிக்கை கூட இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார், "*எப்படி யெனில், மோசே நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக் குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தி னாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது*" (எபி. 9:19-22). எபிரெய எழுத்தாளர் மேலும் சொல்லும் போது, "*இரண்டாங் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம்*

*வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தை தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான் என சொல்கிறார்* " (எபி. 9:7).

பிறகு, எபிரெய எழுத்தாளர் இப்படியாக முடிக்கிறார் "*அல்லா மலும், காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திச் செய்யமாட்டாதே*" (எபி. 10:4). பலியிடப் பட்ட மிருகங்கள் மந்தையின் சிறந்தவைகளாக, பழுதற்றதாக, கறையற்றதாக இருந்தாலும் கூட அவைகள் மிருகங்கள் தானே. ஆகையால், அங்கே ஒரு பூரண பலி தேவைப்பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த பூரண பலிக்கு நிழலாகவே இருந்தது. மிருகங்களினால் பாவத்தை எடுத்துப் போட முடியாமல் போனதினாலும், மனிதன் தானே பாவியாக இருந்து, தன்னையோ, மற்றவர்களையோ இரட்சிக்க முடியாது என்பதாலும் பூரண பலியாக யார் இருக்க முடியும் என்கிற கேள்வி எழுந்தது. அது ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ஒருவரைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்தார். அவர் பாவஞ்செய்யவில்லை என்று பேதுரு சொன்னார் (Iபேதுரு 2:22). கிறிஸ்து பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்து, நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொண்டு சோதனைக்கு அடிபணியாமல் இருந்ததால் தான் இந்த உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க முடிந்தது.

பொன், வெள்ளி போன்றவைகளால் நாம் மீட்கப்படவோ அல்லது இரட்சிக்கப்படவோ இல்லை என்று பேதுரு சொல்கிறார். "*உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியி னாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தி னாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே* " (Iபேதுரு 1:18, 19). மனிதன் தன் வாழ்க்கைப் பாதையில் எதை வேண்டுமானாலும் வாங்கலாம் அல்லது எதற்காக வேண்டுமானாலும் லஞ்சம் கொடுக்கலாம். ஆனால், இரட்சிப்பை அவனால் வாங்கவோ அல்லது தான் இரட்சிக் கப்படும்படியாய் கர்த்தருக்கு லஞ்சம் கொடுக்கவோ முடியாது.

ஆகையால், நாம் நம்முடைய நம்பிக்கையை சரீரப்பிரகாரமான காரியங்களின் மீது வைக்காதபடி ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும். கடைசியாக, மனிதனுடைய மதங்களோ அல்லது மனுஷ ருடைய உபதேசங்கள் மற்றும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதோ ஒருவரை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். " *மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்* " (மத். 15:9) என்று. நாம் கள்ளப் போதகர்களுக்கு வாழ்த்துதல் சொன்னால், அவர் களுடைய துர்கிரியைகளுக்கும் பங்குள்ளவர்களாகிறோம் என்று யோவான் சொல்கிறார் (IIயோவான் 11). மறுபடியும் பவுல்,

பிரிவினைகள் உண்டாக்குகிறவர்கள் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யவில்லை என்று கூறுகிறார் (ரோமர் 16:17,18).

பாவிகளாயிருக்கிற நமக்கு இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது, கிறிஸ்துவின் தியாக பலியின் மூலமாகவும், இரத்தஞ்சிந்துதலினாலும் தான் சாத்தியம். கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிற அநேக வசனப்பகுதிகள் இருக்கின்றன. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாகிறோம் அல்லது தேவனுக்கு நாம் சிநேகிதராகிறோம் என்று பவுல் கூறுகிறார். பவுல் இப்படிச் சொல்கிறார். " *சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று* " (கொலோ. 1:19,20). எபேசு கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும் போது, அவர்கள் ஒரு காலத்தில் தேவனிடத்திலிருந்து தூரமாயிருந்தார்கள். ஆனால், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவனிடத்தில் சமீபமானார்கள் என்று கூறுகிறார். மேலும், பழைய பிரமாணமாகிய பிரிவினை என்ற நடுச்சுவர் கிறிஸ்துவின் மரணத்தினாலே தகர்க்கப்பட்டு இப்போது யூதர்களும், புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருப்பதாக பவுல் கூறுகிறார் (எபே. 2:13-17).

கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய இரத்தம் பற்றியும் பேசும் போது பவுல், எபேசு கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். "*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது* " (எபே. 1:7). பவுல் கொலேசே கிறிஸ்தவர்களுக்கு, "*குமாரனாகிய அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது*" என்கிறார் (கொலோ. 1:14). கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தின போது, கிறிஸ்து, "*இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது* " என்றார் (மத். 26:28). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுகிறார்கள் (அப். 2:47). பவுல் எபேசு சபை மூப்பர்களிடத்தில் இப்படியாகச் சொன்னார். " *ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்* " (அப். 20:28). எபே. 5:25-ல், கிறிஸ்து சரீரத்திற்காக அல்லது சபைக்காக மரித்தார். அதாவது, சபைக்காக தமது இரத்தத்தை சிந்தினார் அல்லது தம்முடைய இரத்தத்தினாலே அதை வாங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறோம். வேறுவிதமாகச்

சொன்னால், சபை இருப்பதற்குத் தேவையான கிரயத்தை அவர் செலுத்தினார். அதன் பின்பு, கிறிஸ்தவர்களாக, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்கிறோம். யோவான் இப்படி எழுதினார் "*அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்*" (1யோவான் 1:7). கடைசியாக, கர்த்தருடைய ஜனங்களாக வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுகூரும்படி நாம் ஒன்று கூடுகிறோம் (அப். 20:7). பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது, கிறிஸ்து தம்முடைய சரீரத்தை நினைவு கூரும்படி அப்பத்திலே பங்கு பெற வேண்டும் என்று சொன்னதை வலியுறுத்துகிறார். "போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (I கொரி. 11:25,26).

கிறிஸ்துவின் இரத்தம் பற்றியும், அது ஏன் சிந்தப்பட்டது என்பது பற்றியும், அது பெற்றிருக்கும் வல்லமை பற்றியும் நாம் இன்னும் அதிகமாகச் சொல்ல முடியும். ஆனால், நாம் ஏற்கனவே வசனங்களிலிருந்து வாசித்தவைகள் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து இரத்தத்தைச் சிந்தினபடியால் அவர் ஒரு பூரணபலியாக இருக்கிறார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டபடியால் பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, புதிய பிரமாணம் அவருடைய இரத்தத்தினாலே முத்திரை போடப்பட்டது.

3. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் கீழ்ப்படிதலினாலே அந்த இரத்தத்தோடு தொடர்பு கொள்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், மனிதன் இரட்சிக்கப் பட வேண்டுமென்றால், அவன் இயேசுவில் விசுவாசம் வைத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மாற்கு 16:16; அப். 2:38). ஒருவர் முழுக்கு ஞானஸ்நானத்திலே கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறார். அதோடு கர்த்தருடைய மரணத்தின் நன்மையையும் பெறுகிறார். இதை நாம் ரோமர் ஆறாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பவுல் விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து

மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக்கொண்ட போது, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள் என்று சொல்லப்பட்டு, அவன் பாவங்கள் அதன் மூலம் கழுவப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. *"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்"* (அப். 22:16). மேலும், மனிதன் பாவமன்னிப்பைப் பெறும்படி தம்முடைய இரத்தம் சிந்தப்பட்டதாக கிறிஸ்து சொன்னார் (மத். 26:28; எபே. 1:7). பின்பு, அப். 2:38-ல் பேதுரு, கிறிஸ்துவின் விசுவாசிகளான திரளான ஜனங்களைப் பார்த்து, அவர்கள் பாவமன்னிப்பைப் பெற வேண்டுமானால் மனந் திரும்பி, கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொன்னார். அவர்கள் அப்படிச் செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து, தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். 2:47). எனவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெறவேண்டும். அப்படி ஒருவர் செய்யும்போது கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது.

4. கர்த்தருடைய சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப் பட்டது. இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டபடியால் மிகவும் முக்கியமானது. நாம் கர்த்தருடையவர்களாக மாற வேண்டு மானால் நாம் இந்த சபையிலே அங்கத்தினர்களாக வேண்டும்.

5. ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் ஒளியிலே நடக்கும்போது அல்லது அவருடைய சித்தத்தின்படி செய்யும் போது, அதாவது, அவருக்கு எல்லா வகையிலும் உண்மையாக இருக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவனை சுத்திகரிக்கின்றது.

6. நாம் கர்த்தருடைய ஜனங்களாக வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்று, கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரும்படி அப்பம் பிட்குதலில் பங்கு பெற்று, கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படியாக திராட்ச ரசப் பாத்திரத்திலும் பங்கு பெற வேண்டும். இது நாம் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து செய்த தியாகத்தை நினைவுகூர நமக்கு உதவிச் செய்கிறது.

7. என் நண்பர்களே, கிறிஸ்து உங்களுக்காக மரித்தார். உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் மன்னிப்படையும்படி அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையென்றால், அப்படிச் செய்யும்படி உங்களை நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். கர்த்தர் உங்களுக்கு சாத்தியப்படுத்தியிருக்கிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள தவறுவது மிகுந்த அவமானமுள்ளதாயிருக்கும். *

பெண்கள் பகுதி

# பொன்னைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, தாய்மார்களே இம்மாதமும் இத்தலைப்பின் கீழாக நாம் சந்திக்க கிருபை செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

பொன்னை விட விலையேறப் பெற்ற ஒரு பொக்கிஷத்தை பெற்றுக் கொள்ள நமக்கு விபருப்பமா? அப்படியானால், அப்படி என்ன பொக்கிஷம் அது? பரீட்சைபார்க்கப்பட்டும், சோதிக்கப் பட்டும் கிடைக்கக்கூடிய " விசுவாசமே ", அந்த பொக்கிஷம். நெருப்பு ஆலைக்குள் சென்று புடமிடப்படும்போதுதான் அழுக்குகள் நீங்கிய சுத்த பொன் கிடைக்கிறது. மிகக் கடுமையான சோதனைக்குள் சென்று வெளியே வரும்போதுதான் விலையேறப் பெற்ற விசுவாசமானது பரிசுத்தமாயும், பலமுள்ளதாயும் இருக்கிறது. எல்லோருமே இந்த பொக்கிஷத்தை அடைந்துகொள்ள விரும்புகிறோம். ஆனால், தேவை யான பரீட்சைக்குட்பட வேண்டி வரும்போது நம்மை அதிலிருந்து ஒதுக்கிக் கொள்ள முயற்சிக்கிறோம்.

அப்போஸ்தலன் பேதுரு சக கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது **"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பல விதமான சோதனைகளினாலே துக்கப்படு கிறீர்கள்".**

**அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்க ளுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.** *(1 பேதுரு. 1:6,7).* பேதுருவின் கருத்தை அப்படியே கூறும் வகையில் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியாவில் பார்க்கும் போது, "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளி யைப் போலவும் புடமிடுவார்" *(மல். 3:3).*

நெருப்பினால் பொன் சுத்தமாக்கப்பட்டாலும் அது சோதிக்கப் படவும் வேண்டியதாயிருக்கிறது. பிரச்சனையான நேரங்களில் தான் மனிதன் யார் என்பது வெளிப்படுகிறது. "ஆபத்துக்காலங்களில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதி. 24:10) என்று ஞானி கூறுகிறார். பிரச்சனையான நேரங்களில் தான் தேவனுடைய பிள்ளைகள் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற முடியும்.

பிரச்சனையான சமயத்தை எப்படி பயன்படுத்திக் கொள்வது? உலகம் இன்றைக்கு இதற்கு பல விளக்கங்களும், வழிமுறைகளையும் கொடுத்தாலும் இயேசு கிறிஸ்து கொடுக்கும் விளக்கமே ஒரு தனி சிறப்புடையது. "ஒருவன் சுத்திகரிக்கப்படுவதற்கும், தேவனண்டை யிலே ஒருபடி கிட்டிச் சேரவும் உதவியாயிருக்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் சோதனை" பிரச்சனையான நேரங்களில் நாம்தேவனை மட்டும் சார்ந்திருக்கும் ஒரு சிலாக்கியம் கிடைக்கிறது. எப்போதுமே வசதியான சூழ்நிலையில் இருக்கும் போது நாம் ஒரு போதும் தேவன் மீது விசுவாசம் என்பதை பற்றி கற்றுக் கொள்ளவே முடியாது. பேதுரு கடலில் அமிழும் போது " ஆண்டவரே, என்னை இரட்சியும் " என்று கதறினான். (மத். 14:30) ஒருவேளை அவன் சுலபமாய் கடலில் நடந்திருப்பானானால், தன்னுடைய ஒரே நம்பிக்கை, தனக்கு ஒரே அனுக்கிரகம் அவர் தான் என்பதை உணர அவனுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலும் கொரிந் தியருக்கு எழுதும்போது " பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று ". மரித்தோரை எழுப்பின தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக இப்படிப்பட்ட பாடுகள் என்று கூறுகிறார் (2 கொரி. 1:8-10).

நாம் சோதனையினூடே செல்லும் போது பரிசுத்த தேவனு டைய சித்தத்திற்கு நம்மை கீழ்ப்படுத்துகிறோம். நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே " பட்ட பாடுகளினாலே " கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் (எபி. 5:8) என்று வாசிக்கிறோம். அவருக்கே பாடுகள் அவசியமாய் இருந்ததென்றால் எனக்கும், உங்களுக்கும் எவ்வளவு அதிகம். அதை விடுத்து அவருடைய சித்தத்திற்கு மாறாக துணிந்து செயல்படக்கூடாது.

சில நேரங்களில் நாம் சில தவறான காரியங்களை நம் வாழ்வில் நடக்க அனுமதிப்போம். தேவன் அப்படியே நம்மை ஓர் அசை அசைத்து நாம் நலமானதை காணவும், அவர் விரும்புகிறதை ஏற்றுக் கொள்ளவும் செய்வார். இதை தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த பக்தன் யோபு நான் சுகமாய் வாழ்ந்திருக்கிறேன். "அவர் என்னை நருக்கி என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார் " (யோபு. 16:12) என்று கூறுகிறார்.

அப்படியே யோனா தேவனுக்கு விரோதமாய் தன் பயணத்தை தொடர்ந்த போது தேவன் அவனை மீன் வயிற்றிற்கு போகச் செய்து பிறகு சரியான பிரயாணத்தை மேற்கொள்ள உதவி செய்தார். பிரசங்கி 7-14-ல் பார்க்கும் போது, வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித் திரு. தாழ்வு காலத்தில் சிந்தனை செய் என்று கூறப்பட்டிருக்கிறது. தாழ்மை காலம் என்று கூறும்போது சுகவீனம், துக்கம், பொருளாதார பின்னடைவு போன்றவைகளை கூறலாம். சுகவீனத்தில் மூலம் வலி, வேதனைகள் இருக்கும்போது அதன்மூலம் பொறுமை, தைரியம், நம்பிக்கை இவைகளை வளர்த்திக் கொள்ளலாம்.

இழப்புக்கள் போன்ற துயரமான நேரங்களில் இப்பூவுலகு நிலையற்றது என்று உணர முடியும். பரலோகத்தில் நமக்கு பிரியமானவர் இருக்கும் போது அங்கே செல்ல நாம் ஆயத்தமாவோம். பணத்தை இழந்து பொருளாதார அடியை ஒருவன் வாழ்வில் சந்திக்கும் போது தன் குணாதிசயங்களை நன்றாக கட்டிக் கொள்ள அது வாய்ப்பாக அமையும். துயரங்கள் என்ற மழைதான் ஆவியின் கனிகளை உண்டு பண்ணச் செய்யும். இயேசு கிறிஸ்து இது பற்றி கூறும் போது, **"கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனி களைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்".** *(யோ. 15:2)*

*கஷ்டமான நேரங்களில் தாழ்மையை நாம் அணிந்து கொள்கி றோம். தாழ்மைக் குணம் நம்மை இயேசுவண்டை கொண்டு செல் கிறது. மனிதர்களிடமும் சுமூகமாக நடக்க உதவுகிறது. பவுல் தன் அனுபவத்தில் கூறும்போது* **"நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த் தாதபடிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக் கிறது" [2 கொரி. 12:7] என்கிறார்.**

*மட்டுமல்ல சோதனைகள் மூலம் பொறுமையைக் கற்றுக் கொள்கிறோம். "உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது" (ரோமர் 5:3) பொறுமையை பல விளக்கங்கள் மூலம் விளக்கலாம். "அமைதி யாக காத்திருக்குதலின் வல்லமை"; "நீண்ட சகிப்பு", "அதிவேகமாக செயல்பட நம் சரீரம் ஒத்துழைக்கும்போது நம் எண்ணங்களை அப்படியே அமைதிப்படுத்துவது"; "மேதையை உருவாக்குவதற்கு பொறுமை தேவை; இந்த பொறுமையானது ஏதோ கடையில் விற்கும் ஒன்றல்ல. இதை நாம் கற்றுக் கொண்டு பெற வேண்டும்.*

*வேதத்திலே பொறுமைக்கு உதாரணமாக யோபுவை கூறுவோம். புதிய ஏற்பாடு யோபுவைப் பற்றி கூறும் போது* **"இதோ பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்களென்கிறோம். யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்"** *(யாக். 5:11) என்று பார்க்கிறோம். யோபைக் காட்டிலும் பொறுமையாய் வேறு யாராலும் இருக்க முடியாது. பல கேள்விகளைத் தானே கேட்டுக் கொண்டான். அதன் மூலம் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டான். இப்போது என் கண்கள் காண்கிறது என்கிறான். புரிந்து கொள்ளுதலை பல கேள்வி களுக்குப் பிறகுதான் பெற்றுக் கொள்கிறான். நாமும் கூட பல சமயங் களில் வாசித்த வசனங்களை பலமுறை வாசித்திருந்தாலும் சோதனை யான நேரங்களில் அந்த வசனங்கள் புதுபுது அர்த்தங்களைக் கொடுக்கும்.*

*மேலும், கஷ்டங்களையே சந்தித்த உள்ளத்திற்கு நன்றி என்ற குணம் நிறைய இருக்கும். மரணத்தின் விளிம்பை தொட்டவர்களுக் குத்தான் ஒவ்வொரு நாளும் தேவன் கொடுக்கும் ஈவு என்பது புரியும். தன்னவர்களை நீண்ட நாட்கள் பிரிந்திருப்பவர்களுக்குத்தான் குடும்பத்தில் ஒன்றாக வாழும் சிலாக்கியத்தின் மேன்மை என்ன என்பது புரியும். ஆக கஷ்டப்படும் போது தான் தேவன் நமக்குச்*

செய்யும் காரியங்களின் மேன்மையை உணர்ந்து நன்றியாய் ஜீவிப்போம். இல்லாவிடில் எத்தனை அனுகூலமான சூழ்நிலை இருந்தாலும் குறைகூறியே வாழ்க்கையை கழிக்கிறவர்களாக இருப்போம்.

இன்னொரு காரியம், நாம் துன்பத்தினூடே செல்லும்போது தான் மற்றவர்களின் வருத்தம் புரியும். " ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் " (எபே. 6:2) என்ற வார்த்தையின்படி நாம் வாழக் கற்றுக் கொள்வோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகப் பாடுகளுக்காக மட்டு மல்லாமல் பரலோகம் செல்வதற்காகவும் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

கஷ்டமான, பாடுகள் நிறைந்த பாதைகள் வழியே செல்லும் ஒருவர் தான் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியும். பயத்தினால் குகைகளில் ஒழிந்து திரிந்தபோது தான், தாவீதினால் பல சங்கீதங்களை பாட முடிந்தது. அநியாயமாய் நடத்தப்பட்ட யோசேப்பு பொறுமையாய் அந்த ஏணியில் ஏறி எகிப்திய அரசாங்கத்தின் உயர் பதவியை அடைந்ததோடு பரலோக தந்தையின் அருகிலும் சென்று விட்டான்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து கெத்சமனேயில் வியாகுலப்பட்டு, பிறகு பல பாடுகளை அனுபவித்து கொடூர சிலுவை யில் தொங்கி, மரித்து, இருண்ட குகைக்குள் அடக்கம் பண்ணப்பட்ட போதுதான் யாரும் செய்ய முடியாத உலகத்தின் மிகச் சிறந்த வெற்றி யான உயிர்த்தெழுதலை அடைய முடிந்தது.

பக்தன் யோபு தன் பாடுகள் மூலமாக ஆவிக்குரிய பார்வையை பெற்றுக்கொண்டான். பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவா சத்தை பெற்றுக்கொண்டான். சோதிக்கப்பட்டு பரீட்சை பார்க்கப்பட்ட அவன் விசுவாசம் பொன்னைக் காட்டிலும் மேலானது. யோபுவை போன்ற பக்தர்கள் இன்றைக்கும் நமக்கு ஆறுதலாகவும், பெலத்தை கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே நாமும் கூட கஷ்டமான சூழ்நிலையின் உள்ளே பிரவேசிக்கப்பயப்பட வேண்டாம். நம் விசுவாசம் சோதிக்கப்பட்டு, பரீட்சை பார்க்கப்பட்டு அந்த ஆலை யிலிருந்து வெளியே வரும்போது, மிகவும் பிரகாசமுள்ள பொன் மிளிர்கிறது போல நம் விசுவாசமும் ஜொலித்துக் கொண்டிருக்கும். நம்மைப் பார்த்து மற்றவர்களும் அந்த இரகசியத்தை உணர்ந்து கொள்வார்கள். ஆகவே, பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள நமக்கு சோதனை அவசியம். பரீட்சை அவசியம். சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதின் பொருள் என்ன? குறைகளும், இழப்புகளும், தோல்விகளும், காத்திருக் குதலும், இல்லாமையும் இவையாவும் நாம் அசைக்க முடியாத விசுவாசத்தைப் பெற்று தேவனண்டை கிட்டிச்சேர உதவி செய்யும் காரணிகள் ஆகும். பொறுமையோடே ஓட்டத்தை தொடர்வோம். தேவன் தாமே நம்மோடு இருந்து நமக்கு பெலனாயிருப்பாராக! ஆமென்.

வாலிபர் பகுதி

# அழிவுக்கு முன்னானது அகந்தை

**Bro. பென்னிமார்ட்டின்**

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். " தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர் களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது " (ரோமர் 15:4). வேதாகமத்தின் சம்பவங்கள் அதை வாசிப்பவர்கள் எல்லோருக்குமே மிகப்பெரிய பாடங்களைப் போதிக்கிறது. ஆனால், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கு அது மிகப்பெரிய பாடங்களை போதிக்கிறது. அகந்தை என்பது மனிதனுடைய மிகப்பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. தேவன் அகந்தையான மக்களை கண்டித்திருக்கிறார், தண்டித்திருக்கிறார். அதைப் பற்றிய சில உதாரணங்களை இப்போது நாம் பார்ப்போம்.

**I யூதா ராஜாவாகிய உசியா** (2 நாளா. 26).

உசியா தன்னுடைய பதினாறாவது வயதில் ராஜாவானான். தன்னுடைய ஆவிக்குரிய ஆலோசகரான சகரியாவின் சீர்மிகு வழி நடத்துதலின் கீழ் ஞானமாக அரசாட்சி செய்து தேவனுக்குப் பிரியமாக நடந்து கொண்டான். அவன் தன் சிருஷ்டிகருக்குப் பிரியமான ஆராதனையை ஏறெடுத்தான், அதற்குப் பதிலாக திரளான ஆசீர்வாதங் களை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டான். "அப்படியே அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று; அவன் பலப்பட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அனுகூலமுண்டாயிற்று (வச. 15).

ஆனால், அகந்தையின் காரணமாக அவன் துரிதமாக விழுந்தான். அவனுடைய புகழும், வல்லமையும் அகந்தையாக மாற்றப்பட்டது. அவன் கர்த்தருக்கு விரோதமாக எழும்பினான்; அவனுடைய அகந்தை தூப பீடத்தின் மேல் தூபங்காட்ட அவனைத் தூண்டியது. அதை அசரியா உட்பட 81 ஆசாரியர்கள் எதிர்த்தார்கள். ஏன் எதிர்த்தார்கள்? உசியா ஆசாரியர்களின் செயல்பாட்டினை கையகப்படுத்தினான், ஆசாரியர்கள் வழிவழியாக ஆரோன் வம்சத்திலிருந்து தான் வந்தார்கள். அதினால் பின்வரும் தண்டனைகளுக்குப் பாத்திரமானான்.

**தண்டனை**

A. தேவனுடைய ஆசீர்வாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது (வசனம் 18)

B. அவன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்துக் கொண்டது, அவன்

ஆசரிப்பு வேலைகளைச் செய்ய தகுதியல்லாதவனாகும்படி குஷ்டரோகம் தண்டனையாகக் கொடுக்கப்பட்டது (19,21).

C. அவன் ராஜாக்கள் அடக்கம் பண்ணப்படும் கல்லறையில் அடக்கம் பண்ணப்படவில்லை (வசனம் 23).

## II பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் (தானியேல் 4)

தானியேல் நான்காம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற நேபுகாத் நேச்சாரின் இரண்டாம் சொப்பனத்தில் தற்காலிகமாக அவன் எப்படி கிருபையிலிருந்து விழுவான் என்று காட்டப்பட்டிருக்கிறது. நித்தியமானவர் அவனுக்கு மகிமையையும், வல்லமையையும், செழிப்பையும் கொடுத்திருக்கிறார். ஆனால், அவன் பெருமையுள்ள வனாகி, சர்வவல்லமையுள்ள கர்த்தரின் வல்லமையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், அவன் இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொல்லியிருந்தான் (வசனம் 30). அவன் தன் அகந்தையான வார்த்தை களைப் பேசி முடிப்பதற்கு முன்பே, பரத்திலிருந்து ஒரு சத்தம் வந்து அவனை கண்டித்து காட்டில் மிருகங்களுடன் ஏழு வருடங்கள் வாழும்படி செய்தது (வச. 31,32). இந்த நேபுகாத்நேச்சார் தன்னுடைய பெருமையினால் கீழ்க்காணும் தண்டனைகளுக்குப் பாத்திரமானான்;

A. மனித சமூகத்திலிருந்து துரத்தப்பட்டான்

B. ஒரு மிகப் பெரும் ராஜா தன் உணர்வுகளை இழந்து, காட்டு மிருகத்தைப் போல் நடந்து கொள்வதை விட அவமானம் வேறெதுவும் இல்லை.

## III கோலியாத் (1சாமுவேல் 17)

இந்த கோலியாத் தன்னுடைய அகந்தையினால் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தான், தேவ மனுஷனாகிய தாவீதை அற்பமாக எண்ணினான். " நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் கொடுப் பேன்" என்று பெருமையுடன் தாவீதிடம் கோலியாத் சவால் விட்டான் (வ. 44). ராட்சச மனிதனாகிய கோலியாத் தாவீதின் உண்மையான மதிப்பை அறியாதிருந்தான். யுத்தத்தில் கோலியாத் எவ்விதத்திலும் தாவீதுக்கு இணையானவனல்ல. தாவீது கோலியாத்தின் தலையை பரிசாக வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

பிரியமான வாலிப பிள்ளைளே, மேற்சொல்லப்பட்ட உதாரணங்களிலிருந்து அகந்தையினால் அழிந்து போனவர்களைப் பற்றிக் கற்றுக்கொண்டோம். இது நமக்கு "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்பதை

நினைவுப்படுத்துகிறது " (நீதி. 16:18). எல்லா சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களும் சிருஷ்டிகரிடமிருந்துதான் வருகிறது என்பதை கவனிப்பது முக்கியமாகும். அவைகளில் ஏதோ ஒன்றை அவர் எப்போது வேண்டுமானாலும் அவர் விரும்புகிறபடி பறித்துக் கொள்ள முடியும். இன்றும் அநேக வாலிபர்கள் தேவனிடத்திலிருந்து பல தாலந்துகளைப் பெற்றிருந்தும், அது தேவனால் வந்ததல்ல தங்கள் திறமையினால் வந்ததென்றும் அதினால் பல சாதனைகளை சாதிப்ப தாகவும் சத்தமிட்டுக் கொள்கிறார்கள். அந்த அகந்தையினால் அழிந்து போன அநேக வாலிபர்களை நம் வாழ்க்கையில் பார்க்கிறோம். நாம் அகந்தைக்கு அதிகமான கிரயத்தைக் கொடுக்க வேண்டியதாயிருக்கிற படியால் அதை அகற்றிவிட்டு, தாழ்மையாயிருந்து " ஏற்றக்காலத்தில் தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம் " (1 பேதுரு 5:6).

*தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!*

## இரண்டில் எது?

1. ஒரு நாளை இரண்டு வழிகளில் தொடங்கலாம். ஜெபத்துடன் அல்லது ஜெபமில்லாமல். நீங்கள் எந்த வழியைத் தெரிந்தெடுத்திருக் கிறீர்கள்?
2. கர்த்தருடைய நாளை நீங்கள் இரண்டு வழிகளில் செலவிடலாம். சோம்பேறித்தனமாக அல்லது பக்தி ரீதியாக. நீங்கள் எந்த வழியைத் தெரிந்தெடுத்திருக்கிறீர்கள்?
3. உலகத்தில் இரண்டு வகையான மக்கள் இருக்கிறார்கள். இரட்சிக்கப் பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்படாதவர்கள், நீங்கள் எந்த வகையைச் சார்ந்தவர்கள்.
4. இப்பிரபஞ்சத்தில் இரண்டு எஜமான்கள் இருக்கிறார்கள். தேவன், சாத்தான். நீங்கள் யாரைச் சேவிக்கிறீர்கள்?
5. மக்கள் இரண்டு விதமாக மரிக்கிறார்கள். சிலர் கர்த்தருக்குள் மரிக்கிறார்கள், சிலர் தங்கள் பாவத்தில் மரிக்கிறார்கள். நீங்கள் எப்படி மரிப்பீர்கள்?
6. மக்கள் இரண்டு வகையான இடங்களுக்குச் செல்கிறார்கள். பரலோகம் அல்லது நரகம் - நீங்கள் இந்த இரண்டில் எதற்குப் போவீர்கள்?

சிறுவர் பகுதி

# புதிய ஏற்பாட்டின் ஒழுங்கு

**Bro. ABEL R. NAYAGAM**

**சி**று தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாய் சந்தோஷத்தோடு இருக்கிறீர்கள் என விசுவாசிக்கிறேன். விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகளுக்குச் சென்று கொண்டிருப்பீர்கள்; புதிய வகுப்பு, புதிய நண்பர்கள் என்று ஜாலியாக இந்த கல்வியாண்டு துவங்கி யிருக்கும். அப்படித்தானே? சரி, இந்த கல்வியாண்டும் உங்களுக்கு எல்லாவிதத்திலும் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்று வாழ்த்து கிறேன். ஜெபிக்கிறேன்.

மாதந்தோறும் வெளிவருகிற பாடங்கள் உங்களுக்கு பயனுள்ள தாகவே இருக்கும் என நம்புகிறேன். சிறுவர்களாகிய நாம் இந்த சிறு வயதிலேயே தேவனைப் பிரியப்படுத்துவது நமக்கு மிகுந்த ஆசீர்வாத மாய் அமையும். சரி, இந்த மாதத்திற்கான பாடம் என்ன என்று இப்பொழுது பார்ப்போமா?

தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமம் மொத்தம் 66 புத்தகங்களை உள்ளடக்கியது. பழைய ஏற்பாட்டில் 39 புஸ்தகங்களும் புதிய ஏற்பாட்டில் புஸ்தகங்களும் உள்ளது. இந்த மாதம் நாம் புதிய ஏற்பாட்டை பற்றியும் அதின் ஒருவகை பற்றியும் தெரிந்து கொள்ள போகிறோம்.

புதிய ஏற்பாட்டில் மொத்தம் 27 புஸ்தகங்கள் உள்ளன. முதல் புத்தகம் “மத்தேயு”, கடைசி புத்தகம் “வெளிப்படுத்தின விசேஷம்”. இந்த 27 புத்தகங்களையும் “நான்கு” பிரிவுகளாய் நாம் பிரிக்கலாம்.

**I சுவிசேஷப் புத்தகங்கள் :**

சுவிசேஷம் என்றால் “நற்செய்தி” என்று பொருள். “மத்தேயு”, “மாற்கு”, “லூக்கா”, “யோவான்” இந்த நான்கு புத்தகங்கள் சுவிசேஷப் புத்தகங்கள் ஆகும்.

நமதாண்டவராகிய கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி குறிப்பிடுவதால் இவை சுவிசேஷப் புஸ்தகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இதில் என்ன நற்செய்தி? மனுகுலத்தின் பாவங்களை போக்க கிறிஸ்து பிறந்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என்பதே இந்த சுவிசேஷப் புத்தகங்கள் கூறும் நற்செய்தி.

**II சரித்திரப் புத்தகம் :**

இங்கே, சரித்திரம் என்பது சபையின் சரித்திரம் ஆகும்.

அப்போஸ்தலர் நடபடிகள். இந்த ஒரு புத்தகம் மட்டுமே சபை சரித்திரப் புத்தகம்

லூக்காவால் எழுதப்பட்ட நூல் இது

சபை எப்படி ஸ்தாபிக்கப்பட்டது, எப்படி வளர்ந்தது, அப்போஸ்தலர்கள் எப்படியாக கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள் என்று அனைத்து காரியங்களையும் இந்த புத்தகம் நமக்கு கற்றுத் தருகிறது.

## III நிருபங்கள்

நிருபம் என்றால் கடிதம் என்று பொருள்

சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்ட படி சுவிசேஷம் பரவியபோது, அநேக இடங்களில் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் புதிதாய் பிறந்த கிறிஸ்தவர்களுக்கும், சபைகளுக்கும், தேவனை எப்படி ஆராதிப்பது, எப்படி அவருக்கு பிரியமாய் வாழ்வது, எப்படி கிறிஸ்துவில் வளருவது என்று சொல்லியாக வேண்டும். அதை அப்போஸ்தலர்கள் கடிதங்களாய் எழுதி அவர்களுக்கு போதித்தார்கள்.

ரோமர் - யூதா = மொத்தம் 21 நிருபங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் சுமார் 14 நிருபங்களை எழுதியுள்ளார்.

இன்றைக்கும் இந்த கடிதங்களால் நமக்கு அநேக முக்கியமான பாடங்கள் கிடைக்கிறது.

## IV தீர்க்கதரிசன புத்தகம்

இதில் ஒரு புத்தகம் மட்டுமே உண்டு - அது வெளிப்படுத்தின விசேஷம்.

ஏன் தீர்க்கதரிசன புத்தகம்? ஏனென்றால், முதல் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று கூறப்பட்ட காரியங்களை உள்ளடக்கிய புத்தகம்.

இதில் கூறப்பட்ட பல விஷயங்கள் ஏற்கனவே நடந்து முடிந்து விட்டது.

இன்று அநேகர் இந்த நூலை தவறாகப் புரிந்து கொண்டு தவறான விளக்கங்களை உபதேசம் செய்கிறார்கள்.

ஆனால், உண்மையில் முதல் நூற்றாண்டு எளிதாக புரிந்து கொள்ள பல உருவக மொழி நடை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதத்தோடு ஒத்துபோகிற விஷயங்களை மட்டுமே அது கூறுகிறது.

இந்த மாதம் நாம் கற்றுக்கொண்ட காரியங்கள் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாய் இருக்கும் என நம்புகிறேன். சிறு வயதிலேயே வேத அறிவை பெற்றுக்கொள்வது நமக்கு ஆசீர்வாதமாய் அமையும். நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை உங்கள் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!.

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே,

**செ**ன்ற மாதத்தில் எருசலேமில் நடந்த கூட்டத்தின் முடிவைக் கடிதமாக எழுதி 4 சகோதரரிடத்தில் எருசலேமிலிருந்த அப்போஸ் தலர்கள், மூப்பர்கள், சபையார் கொடுத்தனுப்பினார்கள் என்று பார்த்தோம். எருசலேமிலிருந்து சென்ற யூதா, சீலா என்பவர்களும் (ஆகிய இரு சகோதரர்களும்) தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொல்லி, அவர்களைத் திடப்படுத்தி; சில காலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப்பட்டார்கள், (அப். 15:32,22) இந்த நிகழ்வு அந்தியோகியா சபையிலே நடந்தது.

சீரியா நாட்டிலிருந்த அந்தியோகியாவிலே இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது, அதாவது அந்த பிராந்திய சபையில் இருந்த மூப்பர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள் போதித்தது இல்லாமல் எருசலேமில் இருந்து சென்ற யூதாவும், சீலாவும் பழைய உடன் படிக்கையை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள அவசியமில்லை என்று போதித்திருந்தார்கள். இதே காலகட்டங்களில் பவுல், பர்னபாவும் போதித்தார்கள். பவுல் போதித்தது மாத்திரமல்ல இந்த உபதேசத்தை அல்லது கடிந்து கொள்ளுதலை ஒரு நிருபமாக எழுதி எல்லா பிராந்திய சபைகளுக்கும் கொடுத்தனுப்ப வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து ஒரு நிருபத்தை எழுதினார். அந்த நிருபம் தான் கலாத்தி யருக்கு எழுதின நிருபம். அப்போஸ்தலரான பவுல் முதல்முதலில் எழுதிய நிருபம் இது. எருசலேம் கூட்டத்திற்கு முன்பு அப்போஸ் தலரான பவுலும், பர்னபாவும் சின்ன ஆசியாவில் சுற்றுப் பயணம் செய்து போதித்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே புதிய உடன் படிக்கையினாலே சபைகள் உருவாக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த சபைகளிலே மூப்பர்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள், (அப். 14:21-25) ஆனால், பரிசேயரிலிருந்து கிறிஸ்தவரானவர்கள் பழைய உடன் படிக்கையையும் கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்று ஒரு தவறான போதனையை போதித்ததால் எல்லோரும் குழப்பத்தில் இருந்தார்கள். இந்தக் குழப்பமான சூழ்நிலையை சரிய செய்யும்படி

உடனடியாக ஒரு தீர்வு அவசியமாயிருந்தது. ஆகவே, பவுல் விரைவாக ஒரு நிருபத்தை எழுதியிருக்க வேண்டும் என்று நாம் உணர முடிகிறது. ஆகையால், இந்த நிருபம் எழுதப்பட்ட காலம் கி.பி. 49 அல்லது 50 ஆக இருக்க வேண்டும். இந்த நிருபத்தை அவர் தன் கைப்பட எழுதினார் என்று கூறுகிறார் (கலாத். 6:11).

இங்கே ஒரு கருத்தை நாம் கவனிக்க வேண்டும். அப்.பவுலும் அவருடன் வந்தவர்களும் ஒரு கருத்தைக் கொண்டு வந்தார்கள். பரிசேய மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள் ஒரு கருத்தைக் கொண்டு வந்தார்கள். இதில் பரிசேய மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களான வர்கள் கொண்டு வந்த கருத்து தவறு என்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக யூத கிறிஸ்தவர்கள் அப். பவுலையோ அவருடன் இருந்தவர் களையோ விரோதிகளாக பார்த்தார்கள் என்று தென்படவில்லை. ஆனால், இன்றைய காலங்களில் தவறை திருத்திக் கொள்வதற்குப் பதில் நம்மேல் விரோதம் பாராட்டுகிறார்கள். நம்மைக் கள்ளப் போதகர்களாக சித்தரித்து அவர்களுடைய சபையாரையும் நம்மிடத் திலே தொடர்பு வைக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார்கள். வேதம் எந்த மனிதனுக்கும் சொந்தமானது அல்ல, தேவனுக்குச் சொந்த மானது. வேதம் தேவனுடைய பொக்கிஷம், அதைப் பற்றி சொந்தம் கொண்டாட அல்லது தடை செய்ய யாருக்கும் உரிமை இல்லை தேவனுடைய வார்த்தை என்றாலும் இன்றைக்கு தேவனுடைய சித்தம் என்ன என்பதை புரிந்து கொண்டு அதன்படி நாம் நம்முடைய விசுவாசத்தை ஒழுங்குப்படுத்தி அதன்படி நடக்கவில்லையானால் நாம் பயங்கரமான அபாயத்தில் இருக்கிறோம் என்று இதே வேதாகமத் தால் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம்.

இதன்படி அப்போஸ்தலனான பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது, மிகப்பெரிய அல்லது மிக முக்கியமான ஓர் உதாரணத்தைக் குறிப்பிடுகிறார். கலாத்தியர் 4-ம் அதிகாரம் வசனங்கள் 21 முதல் 31 வரை நாம் கூர்ந்து கவனித்தால் நாம் எப்படிப்பபட்ட நம்பிக்கை கொண்டவர்களாயிருக்கிறோம், அந்த நம்பிக்கையில் இப்பொழுது நாம் எங்கேயிருக்கிறோம் என்பது திட்டமாக விளங்கும்.

கலா. 4:21-ல் பரிசுத்த ஆவியானவர் ஒரு கேள்வியைக் கேட்கிறார். கேள்வியைக் கேட்டுவிட்டு பதிலையும் எதிர்பார்க்கிறார். இன்றைய காலத்தில் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க விரும்புகிற அல்லது நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்பட்டிருக்க விரும்புகிற யாவருக்கும் இந்தக் கேள்விக் கணை தொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல பதிலும் எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.

இந்த கேள்விக்கு நாம் சரியான பதிலைச் சொல்லும்படிக்கு அவர் ஓர் உதாரணத்தைக் கையாள்கிறார். அது என்னவென்றால்:

| | | |
|---|---|---|
| சீனாய் மலை | - | பரலோகம் |
| ஆகார் | - | சாராள் |
| இஸ்மவேல் | - | ஈசாக்கு |
| பழைய உடன்படிக்கை | - | புதிய உடன்படிகை |
| (அல்லது) ஏற்பாடு | - | (அல்லது) ஏற்பாடு |

நாம் இன்றைக்கு பழைய உடன்படிக்கையைக் கைகொள்கிறவர்களாயிருந்தால் இஸ்மவேலைப் போல வாக்குத்தத்தத்தை பெறாத பிள்ளைக்கு ஒப்பாயிருக்கிறோம். நாம் இன்றைக்கு புதிய உடன் படிக்கையை மட்டும் கைகொள்கிறவர்களாயிருந்தால் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்தைப் பெற்ற பிள்ளையாயிருக்கிறோம். நீங்கள் யாராயிருக்க விரும்புகிறீர்கள். இஸ்மவேலைப் போலவா? அல்லது ஈசாக்கைப் போலவா? நம்முடைய நம்பிக்கை பரலோகத்தை நோக்கி இருக்க வேண்டுமா? அல்லது அரபி தேசத்திலுள்ள சீனாய் மலையின் மேல் இருக்க வேண்டுமா? நாம் இன்றைக்கு ஆபிரகாமின் வாக்குத்தத் தத்திற்கு அந்நிய பெண்ணான ஆகாரை நம் தாயாகக் கொள்ள வேண்டுமா? தேவனுடைய சகல தேசத்திற்குமான வாக்குத்தத்திற்கு சொந்தக்காரியான சாராள் நாம் தாயாக இருக்க வேண்டுமா? என்பதை பதிலாகச் சொல்ல வேண்டும். இதற்கு பவுல் 31-ம் வசனத்தில் பதிலும் சொல்லியிருக்கிறார். நாம் அடிமையானவைகளுக்குப் பிள்ளைகளா யிராமல் சுயாதீனமுள்ளவர்களுக்கே பிள்ளைகளாயிருக்க வேண்டும். அதாவது, நாம் புதிய ஏற்பாட்டைக் கைக்கொள்ளுகிறவர்களா யிருக்க வேண்டும் என்பது தான் அதின் முடிவாகவும், விடையாகவும் அதாவது நம்முடைய பதிலாகவும் இருக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் எதிர்பார்க்கிறார்.

நான் இதைப் பற்றி ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் கேட்டார் அப்படியானால் பழைய ஏற்பாட்டை வேதத்திலிருந்து கிழித்துவிடலாமே என்றார். அவருடைய அறியாமையைக் குறித்து நான் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், இராஜ இராஜ சோழனைக் குறித்து நாம் இன்றைக்கு படிக்கிறோம். ஆனால், அந்த ராஜாவின் காலத்து சட்டங்களை நாம் கைகொள்வதில்லை. அதே போல முகலாய சாம்ராஜ்யத்தைக் குறித்தும் ஆங்கிலேயருடைய ஆட்சியைக் குறித்தும் படிக்கிறோம். ஆனால், நாம் அவர்கள் காலத்தின் சட்டதிட்டங்களைக் கைகொள்வதில்லை. ஏனென்றால், அவைகள் இன்றைக்கு நடை முறையில் இல்லை. அதுபோல நாம் நியாயப்பிரமாணத்தை படிக்க லாம். ஆனால், அதில் சொல்லப்பட்ட சட்டங்கள் நமக்குப் பொருந்துமா, இன்றைக்கு அவைகளை நாம் கைக்கொள்ள முடியுமா என்பதை

சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருந்து பரலோகத்தையும் அதின் ஆசீர்வாதத்தையும், சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமா? அல்லது இஸ்மவேலைப் போல இருந்து தேவனுடைய நித்தியமான வாக்குத்தத்தத்தங்களை இழந்து விட வேண்டுமா? அதாவது, புதிய உடன்படிக்கையின்படி நடந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பரலோகத்தை சுதந்தரிக்க வேண்டுமா? பழைய ஏற்பாட்டின்படி நடந்து பரலோக ஆசீர்வாதங்களை இழந்து விட வேண்டுமா என்பதை சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். ஒரு தகுதியான சந்தர்ப்பம் நம்மைத் தேடி வந்துள்ளது நாம் ஒரு நல்ல முடிவு எடுத்து நம்முடைய நிலையை உறுதி செய்து கொள்ள வேண்டும். சீனாய்மலை என்பது நிழல். பரலோகம் என்பது நிஜம். நாம் நிழலை பற்றிக் கொள்ளப் போகிறோமா? நிஜத்தை தரித்துக் கொள்ளப் போகிறோமா? என்பதை முடிவு செய்யுங்கள் .

அடுத்த மாதம் சந்திப்போம்.

**(தொடரும்)**

## நாளும் நடப்பும்

1. தமிழகம் மின்மிகு மாநிலமாக மாறும் - தமிழக அரசு
2. குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சிகளின் நிலைப்பாட்டை பிற கட்சிகள் எதிர்பார்த்து காத்திருக்கிறது.
3. புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக தமிழகத்தைச் சேர்ந்த திரு. சம்பத் நியமனம்.
4. கூடங்குளம் அருகே பேரிடர் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
5. பள்ளி பாடத்திட்டத்தில் 25% தொழில்கல்வி - அப்துல்கலாம் யோசனை.
6. ஜூலை 13-ல் பி.இ., பொதுப்பிரிவு கலந்தாய்வு.
7. பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா - மகேஷ் பூபதி வெற்றி.

# பாடம் - 20 தேவத்துவம் (God Head)

**Bro. K. பாஸ்கர்**

அன்பான திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்.

மீண்டுமாக இந்தத் தொடர்கட்டுரையின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இம்மாதத்தில் தேவத்துவம் (Godhead) என்ற முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொள்வோம். ஏனெனில், அநேகர் கிறிஸ்துவின் சபை என்பது "ஜீசஸ் ஒன்லி குரூப்" என்றும், சிலர் தேவத்துவத்தில் ஒருவர் தான் இருக்கின்றார், அவர்தான் இயேசு கிறிஸ்து அவரே பிதாவும், பரிசுத்த ஆவியானவருமாக இருந்து செயல்படுகிறார் என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, இந்தப் பாடத்தின் மூலமாக தெளிவான சத்தியத்தை அறிந்து கொண்டு அதன் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ளுவோம்.

## I. தேவத்துவம் என்றால் என்ன?

தேவத்துவம் என்ற வார்த்தை ரோமர் *1:20*-ல் காணப்படாத அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் என்றுள்ளது. இந்த வார்த்தை இங்கு பன்மைச் சொல்லாக இருக்கின்றது. தேவனுடைய தேவத்துவம் என்பது அவரது படைப்பில், அதாவது, இயற்கையில் வெளிப்படுத்தி, வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19:1). அதாவது, படைத்தவர் ஒன்றுக்கும் மேற்பட்டவராக இருந்து தமது வல்லமையை வெளிப்படுத்தியிருக் கிறார் என்பது இந்த வசனத்தின் மூலம் தெரிகிறது (ரோம. 1:20).

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று பரிசுத்த வேதாகமம் துவங்குகிறது. (ஆதி. 1:1) தேவன் என்ற வார்த்தை எபிரெய திருமறையில் ஏலோயீம் (ELOHIM) என்றுள்ளது. இந்த வார்த்தையின் பொருள், ஒன்றுக்கும் மேற்பட்டவரைக் குறிக்கிறது. அதாவது, தேவன் என்ற வார்த்தை பன்மைச் சொல்லாக இருக்கிறது. வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தேவத்துவத்தில் மூவர் இருக்கிறார்கள் என்று தெளிவாய் தெரிகிறது.

இயேசு கிறிஸ்து ஆதியிலே தேவனோடு இருந்தார். அவர் தேவனாயிருந்தார் (ஏலோயீம்) சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை

(யோவான் 1:1-3) மேலும், கொலோ. 1:16-ல் ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும் கர்த்தத்தவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்கங் களானாலும் சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது என இவ்வசனங்கள் கூறுகின்றது. இயேசு கிறிஸ்து தேவன், பிதா, சிருஷ்டிகர் (ஏசா. 9:6). பிதாவாகிய தேவனைக் குறித்து சொல்லப்படுகின்ற எல்லா நாமங்களும் இயேசு கிறிஸ்துவுக் கும் பொருந்தும். மேலும், தேவத்துவத்தில் பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிப்பின்போது தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று வசனம் கூறுகின்றது (ஆதி. 1:2) எனவே, தேவத்துவம் என்பது பன்மைச் சொல்லாக இருக்கிறது. தேவத்துவத் தில் மூவர் இருக்கின்றார்கள் என்று வேதம் தெளிவாகச் சொல்லுகிறது.

## II. தேவத்துவத்தில் இயேசு கிறிஸ்து யேகோவாவாக இருக்கின்றார்

உலகம் தோன்றி பல நூற்றாண்டுகள் வரை தேவன் தம்முடைய யேகோவா என்ற நாமத்தை வெளிப்படுத்தாமலிருந்தார். அதாவது, ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகிய மூதாதையர்களுக்கு தேவன் யேகோவா என்ற நாமத்தினாலே தம்மை வெளிப்படுத்தவில்லை. பின்பு, ஓரேப் என்னும் மலையில் எரியும் முட் செடியில் தேவன் மோசேக்கு தரிசனமாகி, "இருக்கிறவராக இருக்கி றேன்" என்று வெளிப்படுத்தினார். இது எபிரெய திருமறையில் "யாவே" (YAHWEH) என்றுள்ளது. இதுவே "யேகோவா" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (யாத். 6:3). பிற்காலத்தில் யூதர்கள் இந்த நாமம் மகா தூய்மையும், பயங்கரமுமானது என்றெண்ணி இந்த நாமத்தைச் சொல்லப் பயப்பட்டார்கள். ஆகவே, அப்பெயரை (யாவே) உச்சரிக்கத் துணியாமல் அதற்கு மாறாக அடோனாய் (ADONAI) என் கர்த்தர் என்று சொல்லி வந்தனர். இதன் அடிப்படையில் தமிழ் வேதாகமத்தில் கர்த்தர் என்றும் ஆங்கில வேதாகமத்தில் (LORD) லார்ட் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், எபிரெய வேதாக மத்தில் "யாவே" என்றுள்ளது. அதாவது யேகோவா என்றுள்ளது.

பிதாவாகிய தேவன் யோகோவாவாக இருக்கின்றார். மேசேக்கு வெளிப்படுத்தப்பட்ட யேகோவா என்ற நாமத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு தம்மை வெளிப் படுத்தும் போது இருக்கிறவராக இருக்கிறேன். அதாவது, யேகோவா என்று வெளிப்படுத்தினார் (வெளி. 1:4,8) இயேசு கிறிஸ்து யாவேவாக இருக்கிறார். அவர் மனித பிறவிக்கும் மேலானவராக இருக்கிறார். அவர் பெத்லகேமில் பிறக்கும் முன்னமே இருந்தார். ஆதியிலே அவர்

தேவனோடிருந்தார், தேவனாக இருந்தார், அவர் தேவனால் சிருஷ்டிக் கப்பட்டவரல்ல அவர் தேவனுக்குச் சமமாக இருக்கிறார் (பிலி. 2:6). நித்திய பிதாவாக இருக்கிறார் (ஏசா. 9:6). அவரது ஆண்டுகள் முடிந்து போவதில்லை தேவன் அவரை தேவனே என்றழைக்கிறார். (எபி. 1:8-12) அவர் கர்த்தராக இருக்கிறார். அதாவது யேகோவாக இருக்கிறார் (பிலி. 2:11).

இயேசு கிறிஸ்து யூதர்களிடத்திலிருக்கும் போது நான் யேகோவா என்ற பொழுது அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோ. 8:58,59) அவரை விசுவாசிக்கவில்லை, ஆகவே, அவர் அவர் களை நோக்கி நானே அவர் (யேகோவா என்று விசுவாசிக்காவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார். (யோவா 8:24) இயேசு கிறிஸ்து நான் தான் யேகோவா என்று அவர்களிடம் சொன்னதினாலே அந்த யூதர்கள் அவர் மேல் கல்லெறியும்படி வந்தார்கள். அப்பொழுது அவர் மறைந்து போனார். (யோவான் 8:59)

இன்றும் யேகோவா சாட்சி என்ற பிரிவுக் கூட்டத்தார் இயேசு கிறிஸ்துவை யேகோவா தேவன் என்று விசுவாசிப்பதில்லை அவர் ஒரு தீர்க்கதரிசி மட்டும் தான். அதாவது, அவர் சாதாரண மனிதர் என்று நம்புகின்றனர். இவர்கள் யாவரும் தங்கள் பாவங்களிலே மரித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் மனந்திரும்பும்படி இயேசு கூறுகின்றார். அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லு கிறேன். நீங்கள் மனந்திரும்பாவிட்டால் அப்படியே கெட்டுப் போவீர்கள் (லூக். 13:3) என்றார். எனவே, தேவத்துவத்தில் இயேசு கிறிஸ்து யேகோவாவாக இருக்கிறார் என்று தெளிவாக உள்ளது.

இன்னும் சிலர், இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பதற்குத் தகுதி யானவரல்ல. பிதாவாகிய தேவனை மட்டும் தான் ஆராதிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். தேவத்துவத்தில் மூன்று பேரும் ஒன்றாக இருக்கிறபடியால் மூவரும் ஒரே தகுதியுடையவர்களாக உள்ளனர். சொல்லப்போனால், மூவரும் இணைந்து செயல்பட்டதி னால்தான் நமக்கு இரட்சிப்பு, ஆசீர்வாதம், எல்லாம் வந்திருக்கின்றது. எனவே, தேவ ஆராதனையின்போது இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே கூடி வரவேண்டியது அவசியமாக உள்ளது. (கொலோ 3:7) தேவ ஆராதனை யின் போது பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு வசனத்தைக் கொடுத்தபடியால் அவரை மகிமைப்படுத்த வேண்டும் (வெளி. 4:1-11; வெளி. 5:1-10).

## III. தேவத்துவத்தில் பரிசுத்த ஆவியானவர்

தேவத்துவத்தில் பரிசுத்த ஆவியானவர் தேவ ஆவியானவர் (ஆதி. 1:2) தேவன் (அப். 5:3,4) கர்த்தர் (ஏசா. 61:1) அதாவது,

யோகோவாவாக இருக்கிறார். பிதா, குமரன் நித்தியமுள்ளவராக இருப்பது போல பரிசுத்த ஆவியானவரும் நித்தியமுள்ளவராக இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரை தேவன் சிருஷ்டிக்கவும் இல்லை. அவர் ஜெநிப்பிக்கப்பட்டவரும் இல்லை. அவர் இருக்கிறவராக இருக்கிறார் (யாவே) இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைக் குறித்து போதித்தது என்னவென்றால், நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரரார்

நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் அவர் என்னை மகிமைப்படுத்துவார் என்றார் (யோவா. 16:7-15) இந்த வசனப் பகுதியில் பரிசுத்த ஆவியானவர் பிதாவிலும், கிறிஸ்துவிலும் இருக்கிறார். எனவே, தேவத்துவத்தில் மூவரும் இணைந்து செயல்படுவதினால் ஒரே தேவன் என்று வேதம் கூறுகின்றது.

பரிசுத்த ஆவியானவர் ஒரு காற்றோ, ஒரு விசையோ அல்லது ஒரு புயலோ இல்லை. அவர் ஒரு நபராக இருக்கிறார் என்று இயேசு போதித்தார். பரிசுத்த ஆவியானவரை தேற்றரவாளன், அவர், உணர்த்துவார் என்று சுமார் பத்து முறை அவர். இவர் என்று உயர் திணையில் சொல்லுகிறார். ஆனால், இன்று அநேகர் அவரை துக்கப்படுத்தும்படியாக ஆவி வந்துச்சு, போயிடுச்சு, அது, இது என்று ஒரு விலங்கை குறிப்பிடுவது போல சொல்லுகின்றனர்.

ஆவியானவர் தந்தருளின வரத்தின்படி அந்நிய பாஷை (மொழி) களில் பேசினவர்கள் தேவனுடைய மகத்துவத்தை, சுவிசேஷத்தைச் சொன்னதினால் மூவாயிரம் பேர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் என்று வேதம் கூறுகின்றது (அப். 2:37-41). ஆனால், இன்று அந்நிய பாஷை என்று சொல்லி பேசுகிறார்களே எத்தனை பேர்கள் மனந்திரும்பி ஞானஸ் நானம் பெற்றுக்கொண்டார்கள்?. இப்படி பேசுகிற சபையை இயேசு கட்டவில்லை என்பதை புரிந்து கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபைக்கு மனந்திரும்புங்கள். ஞானஸ்நானம் பெறுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வருகிறார். ❁

# நம் ராஜா வருகிறார்

**_Charles E. Cobb_**

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவனின் ராஜாவாக இருக்கிறார். அவர் ராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தாவாக வாழ்கிறார், ஆளுகிறார் (வெளி. 17:14; 19:16). சபையில் அவர் எல்லாவற்றுக்கும் தலையாயிருக்கிறார், அவரே சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார். இன்று அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து தம்முடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட வர்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கு தம்முடைய வருகைக்கான நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

கெம்பீரமான இயேசு தம்முடைய மகிமைப் பொருந்தினவராய் சகல பரிசுத்த தேவதூதர்களுடன் வருவார். அது எவ்வளவு வல்லமை யான, ஒளி மயமான காட்சியாக இருக்கும். தேசங்களிலுள்ள மனிதர்கள் அவருடைய மகிமையைக் காண்பார்கள். அது ஏற்கனவே அறிவிக்கப் பட்டுவிட்டது "கண்கள் யாவும் அவரைக் காணும் அவரைக் குத்தின வர்களும் அவரைக் காண்பார்கள்" (வெளி. 1:7).

இயேசு கிறிஸ்து திரும்ப வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து ஏருசலேமிலிருந்து ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வார் என்பது ஒரு பிரபலமான கோட்பாடு ஆனால், சோககரமாக அதற்கு போதுமான வேதாகம அடிப்படையிலான உண்மையான ஆதாரங்கள் இல்லை. ராஜ்யம் இயேசுவின் சமகாலத்தவர்களில் சிலர் உயிரோ டிருந்த போதே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது (மாற்கு 9:1). கொலோ செயருக்கு எழுதப்பட்ட நிரூபத்தில் ராஜ்யம் ஏற்கனவே இருந்ததையும் மக்கள் அந்த ராஜ்யத்தில் உட்படுத்தப்பட்டதையும் நாம் கற்றுக் கொள்கிறோம் (கொலோ. 1:13,14). ஆகவே, ராஜ்யம் ஏற்கனவே இருந்து வருகிறது, இயேசு அதன் ராஜாவாக இருந்து அதை ஆண்டு கொண்டி ருக்கிறார்.

கிறிஸ்துவின் வருகைப்பற்றி தேதி குறிப்பது காலகாலமாக பிரபலமான ஒரு யூகமாக இருந்து வருகிறது. வேத வாக்கியங்களின் வெளிப்படையான போதனை இயேசு எப்போது வருவார் என்பது யாருக்கும் தெரியாது என்பது தான். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடர் வருகிற விதமாய் வரும்...." பேதுரு 3:10; சமாதானமும், சௌக்கியமும் உண்டென்று மனிதர்கள் செல்கிறார்கள்.

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத் தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" (I தெச 5:3; II பேதுரு 3:34; I தெச 4:16)

**ஆனால் அந்த நாளும், நாழிகையும் நமக்குத் தெரியாது (மாற்கு 13:32,33)**

நம் கர்த்தர் ஜீவிக்கிறது எவ்வளவு நிச்சயமோ அதேப் போல நிச்சயமாக அவர் திரும்பி வருவார். "நான் மறுபடியும் வருவேன்"

என்பது தான் தேவ குமாரனுடைய உண்மையுள்ள வாக்குதத்தமாயிருக்கிறது (யோ. 14:3).

நம் ராஜா வரும்போது மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் கூப்பிடுவார் (வெளி 20:12). கனம், மேன்மை, வல்லமை பொருந்திய மனிதர்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்படி அழைக்கப் படுவார்கள். வீணான வாழ்க்கையை வாழ்ந்தவர்களும் கர்த்தருக்கு முன்பாக நிற்பார்கள். பணக்காரர், ஏழைகள், அடிமைகள், சுயாதீனமானவர்கள், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலுமுள்ள எல்லா இனத்தாரும் கிறிஸ்துவுக்கு பதில் சொல்ல வேண்டும் (II கொரி 5:10).

மனிதர்கள் மறைந்து கொள்ள நாடலாம். அவர்கள் ஒரு மனதோடு சாக்குபோக்கு சொல்லலாம். "மனிதர்கள் தங்கள் பாவங்களால் ஆளப்பட்டு, அவைகள் கர்த்தரால் கண்டுபிடிக்கப்பட்டபடியால் மிகுந்த வேதனையில் அல்லலுறுவார்கள்". மறைந்து கொள்ள சாக்குபோக்கு சொல்ல, பயத்தில் அலற அவர்கள் எடுக்கும் எந்த முயற்சியும் ராஜாவுக்கு முன்பாக வெற்றி பெறாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இரக்கமில்லாமல் தான் நடக்கும். ஏனென்றால் மனிதர்கள் வாழ்கின்ற நாட்களில் அவர்கள் மீது தேவன் இரக்கம் பாராட்டி ஆயத்தமாவதற்கு அவர்களுக்கு அநேக வாய்ப்புகளைக் கொடுத்தார்.


தேவனுடைய திட்டம் என்னவென்றால், இயேசு திரும்ப வரும் போது பிதாவாகிய தேவனிடத்தில் ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1கொரி. 15:22-28). ராஜாதி ராஜா சாத்தான் மீதும் அவனுடைய சேனையின் மீதும் வெற்றி வாகை சூடுவார். எல்லாவற்றையும் அவர் வென்று வெற்றி சிறந்த ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் பிரஜைகளும் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளும் பிதாவினால் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எபே. 5:5). இந்த பூமிக்குரிய வாழ்விற்கான சோதனைகள், பாடுகள் எல்லாம் ஒழிந்துபோம். அங்கே சமாதானமும், தூய்மையும், அழகும் நீடித்திருக்கும் சமாதானமும் இருக்கும்.

ராஜா வருகிறார் என்பது அந்த மகிமையான நிகழ்வுக்கு ஒவ்வொருவரையும் ஆயத்தமாக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் உண்மையுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் (தீத்து 2:11,12). கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஆயத்தமான நிலையிலே இருக்க வேண்டும் (மத். 7:21; மாற்கு 16:15,16; எபி. 5:8,9).

நம் ராஜா வருகிறார். இயேசு உங்கள் ராஜாவாக இல்லையென்றால் நீங்கள் அவருடைய ராஜ்யத்தில் இல்லையென்றால், நீங்கள் உங்கள் எஜமானுக்கு, ஆண்டவருக்கு சேவை செய்யவில்லையென்றால் நேரம் உங்களுக்கு வாய்ப்பு தருகிறபடியால் நீங்கள் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| பொதிகை TV | சனி | காலை | 5:30 மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:00 மணி |
| தமிழன் TV | சனி | காலை | 6:15 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |





Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |


தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.









# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.